# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு
## (2015/2016) (மார்ச்/ஏப்ரல்) - 2019

## ED/S 2113 கல்வி உளவியல் (Educational Psychology)

நேரம் 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

## பகுதி – I

1.

அ) ''பிள்ளை விருத்தியென்பது ஓர் அமைப்பினுள் நடைபெறுகின்ற வளர்ச்சியுடன் படிப்படியாக நடைபெறும் கற்றல் அனுபவங்களாகும்.'' இதன் அடிப்படையில் பிள்ளை விருத்தி பற்றிய எண்ணக்கருவினை விளக்குக? (4 புள்ளிகள்)

ஆ) பிள்ளை விருத்தியில் உயிரி - சூழல் இடைத்தாக்கம் கொள்கை பற்றி உளவியலாளர்கள் கூறிய கருத்துக்களின் முக்கியத்துவத்தை விமர்சிக்குக. (5 புள்ளிகள்)

இ) ''முன் பிள்ளைப் பருவத்தில் ஏற்படும் சமூக மனவெழுச்சி வளர்ச்சியானது எதிர் கால ஆளுமையை தீர்மானிப்பதில் முக்கிய காரணியாக அமைகின்றது.'' இக்கருத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. (5 புள்ளிகள்)

2.

அ) ''தூண்டி- துலங்கல் செயற்பாட்டில் உடல் மாற்றம், உளவியல் மாற்றத்தினூடாக மனவெழுச்சி வெளிப்பாடு ஏற்படுகின்றது.'' இது பற்றி சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

ஆ) குழந்தையின் நுண்ணறிவு வளர்ச்சி பற்றிய ஜீன் பியாஜேயின் சிந்தனை வளர்ச்சி கட்டங்களைத் தருக. இக்கட்டங்களில் பாடசாலை புகாநிலை பருவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக. (5 புள்ளிகள்)

இ) எண்ணக்கரு, எண்ணக்கருவிருத்தி பற்றிய பியாஜேயின் கருத்துக்களின் அடிப்படையில் உமது கருத்துக்களை உதாரணச் செயற்பாடுகளின் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

3.

அ) ''புலக்காட்சி மூலம் உள்ளத்தினுள் உருவாகும் அமைப்புக்களை மீட்டறியும் சக்தி ஞாபகம் ஆகும்.'' ஞாபகத்தின் முதல்படியான மனனம் செய்தல் பற்றி உளவியலாள் கூறிய கருத்துக்களை விளக்குக? (04 புள்ளி

ஆ) மாணவரின் கற்றலை பாதிக்கின்ற நிகழ்வுகள் குறுக்கீடுகள் என அழைக்கப்படுகின் இக்குறுக்கீடுகளை விளக்கி இதிலிருந்து மீள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஐந்தி (05) மாணவருக்கு எடுத்துரைக்குக. (05 புள்ளி

இ) நேரான, எதிரான கற்றல் இடமாற்றம் வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரு எவ்வகையில் பயன்படலாம் என்பதனை மதிப்பிடுக. (05 புள்ளி

## பகுதி – II

4.

அ) தனியாள் வேறுபாட்டில் பரம்பரையும், சூழலும் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின் என்பதை சுருக்கமாக விளக்குக. (8புள்ளிக

ஆ) விசேடதேவைகள்சார் கல்வியை ஏன் இன்று முக்கியத்துவப்பபடுத்தப்படுகின்றது என்ப பொருத்தமான நான்கு (04) உதாரணங்களை எடுத்துக் காட்டி விளக்குக. (8புள்ளிக

இ) ஆளுமையின் தனியாள் வேறுபாடுகளை பற்றிய விளக்கத்தில் சுய எண்ணக் அணுகுமுறை எவ்வாறு தொடர்புறுகின்றதென்பதை மதிப்பிடுக. (8புள்ளிகள்

5.

அ) தூண்டல் - துலங்கல் கோட்பாட்டின் அடிப்படையில் தோண்டைக் உருவாக்கிய மூன் கற்றல் விதிகளை எவ்வாறு வகுப்பறையில் பிரயோகிப்பீர் என்பதை சுருக்கமாக விளக்குக

(8 புள்ளிக

ஆ) "ஒரு நிபந்தனைப்பாட்டுத் தூண்டியை உணவிற்கு பதிலாக புதிய தூண்டிக்கு உமிழ்நீ சுரக்கச் செய்ய முடியுமென பவ்லோ எடுத்துக்கூறினார்." இக்கருத்தினை எவ்வா வகுப்பறையினுள் பிரியோகிக்க முடியுமென்பதை எடுத்துக்காட்டுக. (08 புள்ளிக

இ) உயிரியிடம் அழிந்துபோன துலங்களை மீளவலியுறுத்துவதன் மூலம் அவற்ை தாமாகவே இயங்கச் செய்ய முடியுமென ஸ்கின்னர் தனது பரிசோதனையில் எடுத்து காட்டியுள்ளார். அவர் எடுத்துக்காட்டிய முக்கியமான மூன்று கருத்துக்களை வியாக்கியான செய்க. (8புள்ளிகள்

6.

அ) "மக்டுவலின் கொள்கையின்படி இயல்பூக்கம் என்பது பிறக்கும் போதே ஒரு உயிரியிடத்தில் அமைந்துவிட்ட இயல்பான உளப்போக்காகும். மனிதனில் இவ்வகையான இயல்பூக்க நடத்தைகள் மூன்று உளக்கூறுகளாக தொழிற்பட்டு நடத்தைக்கு வழிகோலுகின்றன"

(i) இம் மூன்று உளக்கூறுகளின் செயற்பாடுகளை விளக்குக?

(ii) வகுப்பறைக்கற்பித்தலில் இயல்பூக்கங்களை பிரயோகிக்கும் மூன்று செயற்பாடுகளை முன்வைத்து விளக்குக. (8புள்ளிகள்)

ஆ) 'பிள்ளையின் ஊக்கிகள் எல்லாம் விருப்பு, பற்று, மனப்பாங்கு, சுவை போன்றவற்றால் ஆக்கப்பட்டு ஏதேனும் இயல்பூக்கமொன்றுடன் தொடர்பாக இருக்கும். ஆனால் பிள்ளை வளரச்சியடைந்து மனிதனாக இத்தொடர்பு நீக்கப்பட்டு தாமே தொழிற்படுபவையாக அமைகின்றன' கற்றலில் இதன் பிரியோகம் எவ்வாறு அமையுமென ஆராய்க. (8புள்ளிகள்)

இ) இயல்பூக்கங்களையும் எவ்வாறு ஆசிரியர் வகுப்பறை கற்பித்தலில் பிரியோகிக்கலாம் என்பதை பல்வேறு உதாரணங்கள் மூலம் தொகுத்துக் கூறுக. (8புள்ளிகள்)

7.

பின்வருவனவற்றிற்கான விளக்கங்களைத்தருக

அ) நியம சிந்தனைப்பருவம் ( Formal Operations)

ஆ) முதிர்சியும் கற்றலும்

இ) உள்ளத்தின் மூன்று கூறுகளும் அதனுடன் தொடர்பான நடத்தை உருவாக்கமும்.

ஈ) கற்றல் பாதை. (4x6 = 24 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)